# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2453/35 - 2025 සැප්තැම්බර් මස 12 වැනි සිකුරාදා - 2025.09.12

2453/35 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம்: KIDS/LND/09/ACQ/07/05/01.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ், நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

பொதுத் தேவை என்பது, இடங்கொட பிரதேசத்திற்கு வழங்கப்படும் மின்சாரத்தின் தரத்தையும் நம்பகத் தன்மையையும் மேம்படுத்த ஒரு துணை மின் நிலையம் (கென்ரீக்) ஒன்றை அமைத்தல்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

சப்பிரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட கோரளை உடபத்துவ கிரியெல்ல பிரதேச செயலாளர் பிரிவில் மாட்டுவாகல கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள இரத்தினபுரி நில அளவையாளர் நாயகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட R/KRE/2024/38 என்ற புலக்குறிப்பு புத்தக விவரமான வரைபட இலக்கம் 620623, வலய இலக்கம் 04, கி.ப. 325, தாள் இலக்கம் 01, துண்டு இலக்கம் 01 இல் 0.0506 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள காணித் துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 01**

காணியின் பெயர்: மட்டுவாகல தோட்டம்; உரிமை கோருபவர்: சீ/ச, பலாங்கொடை தோட்டக் கம்பனி, பாம்காடன், இரத்தினபுரி; விஸ்தீரணம்: 0.0506 ஹெக்டயார் (00 ஏக்கர் 00 றூட் 20 பேர்ச்).

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கிரியெல்ல பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 03 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

குமாரி ஷம்அதிகே,
பிரதேச செயலாளர்,
கிரியெல்ல.

பிரதேச செயலகம்,
கிரியெல்ல,
2025, செத்தெம்பர் 03.

EOG 09 - 0097

---

திருத்தம்

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்தல் (திருத்தச்) சட்ட திருத்தப்பட்டபடி காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் அறிவித்தலின் கீழ் இல. 2104/32 மற்றும் 2019.01.04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச வர்த்தமானப் பத்திரிகையில் 14A பக்கத்தில் காட்டப்பட்டுள்ள கடத்திரல் வரைபட இல. 520001, தொகுதி இல. 40, தாள் இல. 08 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணித் துண்டின் மொத்த விஸ்தீரணம் 0.0457 ஹெக்டயாரின் துண்டு இல. 251, 253, 255, 258, 260 மற்றும் 261 இன் காணித் துண்டுகளுக்கு மேலதிகமான 256 இன் ஹெக்டயார் 0.0141 இன் காணிப் பகுதி 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலுக்குள் உள்ளடக்கப் படுவதாக அதன் 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலுக்கு இத்தால் மூலம் அறிவிக்கின்றேன்.

பீ. ஏ. டீ. சிந்தக்க,
பிரதேச செயலாளர்,
ஹோமாகமை.

பிரதேச செயலகம்,
ஹோமாகமை,
2025, செத்தெம்பர் 10.

EOG 09 - 0098

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.